RPAD

வேலூர் வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திரு.ஆ தண்டாயுதபாணி, B.Sc.,

ந.க.அ5/1063/2019.

நாள்: 12.09.2019.

பொருள்: மனைப்பிரிவு – வேலூர் ஊராட்சி ஒன்றியம் - அனுமதியின்றி மனைபிரிவு வரன் முறைபடுத்துதல் திட்டம் 2017 - வேலூர் ஊராட்சி ஒன்றியம் பூதூர் ஊராட்சி. சர்வே எண்கள்: 239/1, 2, 240, 259/1 மற்றும் 259/2-ல் 4.49 ஏக்கர் (18200 ச.மீ) பரப்பில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைபிரிவிற்கு வரன்முறைபடுத்த – வரன்முறை தொகை மற்றும் வளர்ச்சி தொகை செலுத்தியதின் பேரில் - ஊராட்சிக்கு ஒதுக்க வேண்டிய 6696 ச.அடி ஒதுக்கப்பட்டு உள்ளதாலும் - மேற்படி மனைபிரிவிற்கு வரன்முறைப்படுத்தி உத்திரவிடல் - சார்பு.

பார்வை: 1.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொறுப்பு) வேலூர் மண்டலம், அவர்களின் கடிதம் ந.க.3372/2018/வேம3, நாள்: 20.02.2019.
2.மாவட்ட பதிவாளர் அலுவலக பத்திரம் ஆவண எண்.8972/2012, நாள்: 24.07.2012 மற்றும் 6720/2019, TP/69768082/2019.
3.பூதூர் ஊராட்சி தீர்மானம் எண்.19, நாள்: 19.08.2019.

<><><><>

உத்திரவு:

பார்வை 1-ல் காணும் வேலூர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), வேலூர் மண்டலம் அவர்களின் கடிதத்தின் மூலம் வேலூர் ஊராட்சி ஒன்றியம் பூதூர் ஊராட்சி கிராமம். சர்வே எண்கள். 239/1, 2, 240, 259/1 மற்றும் 259/2-ல் 4.49 ஏக்கர் (18200 ச.மீ) ஏக்கர் நிலத்தை அனுமதியற்ற மனைபிரிவுகளை வீட்டுமனைகளாக பிரித்து அரசு அங்கீகார D.T.C.P 103(R)/2019 என எண்ணிட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து மனைப்பிரிவில் விற்பனையாகாத மனைகள் எண்ணிக்கை 44 (நாற்பத்தி நான்கு) எண்கள். மனை எண்கள் 3 முதல் 8, 27 47, 48, 66 முதல் 70, 74, 77 மற்றும் 91 முதல் 118 வரை ஆகும். விற்பனையாகாத மனைகளின் மொத்த சதுர அடி 65489 ஆகும். அரசுக்கு செலுத்த வேண்டிய வரன்முறை தொகை மற்றும் ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய வளர்ச்சி தொகை ஆகிய தொகையினை வங்கி வரைவோலையாக உரிய தலைப்பில் செலுத்தி அதனுடைய நகல்களை இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்ததின் அடிப்படையிலும் மற்றும் உள்ளாட்சி அமைப்பிற்கு ஒதுக்கப்பட வேண்டிய இடம் தானப்பத்திரம் முலமாக பார்வை 2-ல் காணும் ஆவண எண் 8972/2012, நகலாகவும், ஆவணம் எண் 6720/2019 அசல் ஆவணங்கள் முலம் பதிவு செய்து ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது

மேலும் பார்வை 3-ல் காணும் பூதூர் ஊராட்சி தீர்மானம் எண்.19, நாள்: 19.08.2019 மூலம் மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாலும், மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு வரன்முறைபடுத்தி இவ்வரைபடம் அங்கீகரித்து இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட மனைகள் விபரம்: மனை எண்.102 மற்றும் 118.

இணைப்பு: அங்கீகரிக்கப்பட்ட வரைப்படம் 1.

12/9/19.
தனி அலுவலர்
பூதூர் ஊராட்சி மற்றும்
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
வேலூர்.

12/9/19

பெறுநர்:
திரு எஸ். சுரேஷ்பாபு,
எண்.9, அவ்வையார் நகர்,
இரண்டாவது தெரு, தொரப்பாடி, வேலூர் - 632 002.

நகல்:
1.சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், வேலூர்.
2.நகர் ஊரமைப்பு ஆணையர், எண்.807, அண்ணா சாலை, சென்ளை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. சென்னை.2.
3.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் மண்டலம், முன்னாள் படைவீரர் மையம், 2-வது தளம், பெரியார் பூங்கா எதிரில், வேலூர் - 632 001.அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
நகல் பணிவு: உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), வேலூர்-9.

<u>நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)</u>
வேலூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : **திருமதி.கே.வி.ரேகா,டி.சி.இ.,**

ந.க.எண்.3372/2018/வேம3, **நாள்: 20.02.2019**

* * * * *

| | |
|---|---|
| பொருள் : | அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைபடுத்துதல் திட்டம் – 2017 – **4.49** ஏக்கர் (**18200.00** ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல்– தொடர்பாக. |
| பார்வை : | 1. அரசாணை எண் : 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3), நாள் : 04.05.2017.<br>2. அரசாணை எண் : 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3), நாள் : 13.10.2017.<br>3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் Operational Guideline, Roc. No.13193/2017/LA2, நாள். 30.10.2017, 31.10.2017, 03.11.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.<br>4. மனுதாரர் திரு.S. சுரேஷ்பாபு அவர்களின் விண்ணப்பம் நாள்: 10.05.2018.<br>5. அரசாணை எண் : 21, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3), நாள் : 05.02.2019.<br>******** |

<u>உத்தரவு :</u>

பார்வை (1) மற்றும் (2)–ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை (3)–ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை (4)–ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம், பூதூர் ஊராட்சி / கிராமம், சர்வே எண்கள் : 239/1, 2, 240, 259/1 மற்றும் 259/2–ல் **4.49** ஏக்கர் (**18200.00** ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ./ந.ஊ.து.இ (வே.ம.) வரன்முறைபடுத்துதல் எண்: 103(R)/2019** என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவுன் மொத்த பரப்பு | : | **18200.00** ச.மீ (அ) **195584.40** ச.அடி (அ) **4.49** ஏக்கர் |
| மொத்த மனைகளின் எண்ணிக்கை | : | **118** |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | **74** |
| விற்கப்பட்ட மனை எண்கள் | : | 1, 2, 9-26, 28-46, 49-65, 71-73, 75, 76, 78-90 |
| விற்கப்பட்ட மனைகளின் மொத்த பரப்பளவு | : | **95272.00** ச.அடி |

விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை : 44
விற்கப்படாத மனைகளின் எண்கள் : 3-8, 27, 47, 48, 66-70, 74, 77, 91-118
விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு : 65489.00 ச.அடி
திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு : 6696.00 ச.அடி – 10.22%
(மனை எண்: 102, 111, 118 )

செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்

1. பரிசீலனைக் கட்டணம்

| | |
|---|---|
| அ. இணையதள வாயிலாக மனை ஒன்றிக்கு ரூ.500/– வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | ONLINE REGISTRATION NO : DTCP/L/0247701/2017, நாள். 04.05.2018–ன் படி விற்கப்படாத 43 மனைகளுக்கான கூராய்வு கட்டணம் ஒரு மனைக்கு ரூ.500/– வீதம் ரூ.21,500/– ONLINE–ல் செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்தப்பட வேண்டும்.

**1. வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்**

| மனை எண் | பரப்பளவு (ச.மீ) | வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 30/– (ரூபாய் முப்பது வீதம்) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 25/– (ரூபாய் இருபத்தைந்து வீதம்) |
|---|---|---|---|

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

**அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு**

| | |
|---|---|
| " 0217 - Urban Development<br>60 - Other Urban Development Schemes<br>800 - Other receipts<br>AT - Receipts under Regularization charges of Unapproved Layout and Plots - DTCP<br>27 - Non Taxation Fees<br>30 - Regularisation<br>DPC : 0217 60 800 AT 2730) " | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

**ஆ) வளர்ச்சிக் கட்டணம் கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.**

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

04.01.2018–க்கு பின்னர் கூராய்வு கட்டணம் செலுத்தப்படும் மானகளுக்கு பார்வை 5–ல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ளவாறு கட்டணங்கள் வசூலிக்கப்பட வேண்டும்.

பார்வை 1, 2 மற்றும் 5–ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1. அரசாணை (நிலை) எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நவ4(3) நாள்.13.10.2017–ல் விதி எண்.7 (g) (ii) மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் (ம) திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.
2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
வேலூர் மண்டலம்.

இணைப்பு:
மனைப்பிரிவு வரைபடம் – 2.

பெறுநர்,
தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்,
பூதூர் ஊராட்சி,
அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம்,
அணைக்கட்டு வட்டம்,
வேலூர் மாவட்டம்.

நகல்:

| | |
|---|---|
| 1. மனுதாரர்.<br>Mr. S. Suresh Babu,<br>No.9, Avvaiyar Nagar,<br>Second Street,<br>Thorapadi,<br>Vellore – 632 002. | உள்ளாட்சிக்கு தேவையான ஆவணங்கள் மற்றும் விவரங்கள் சமர்ப்பிக்கும் பொருட்டு |

| | |
|---|---|
| 2. உதவி இயக்குநர்,<br>நில அளவை (ம) பதிவேடுகள் துறை,<br>வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>வேலூர் மாவட்டம். | சாலை (ம) பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 3. வட்டாட்சியர்,<br>அணைக்கட்டு வட்டம்,<br>வேலூர் மாவட்டம். | சாலை (ம) பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 4. சார்பதிவாளர்,<br>வேலூர் சார்பதிவாளர் அலுவலகம்,<br>வேலூர் மாவட்டம். | சாலை (ம) பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 5. நகர் ஊரமைப்பு ஆணையர்,<br>807, அண்ணா சாலை,<br>சென்னை – 2. | (பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது) |
| 6. கோப்பு<br><br>7. வைப்பறை | |